# ஊடக வெளியீடு

## கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண் (IIP): டிசம்பர் - 2016

## தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம்

தொலைபேசி : 011-2147401 தொ.நகல்: 011-2147412 பெப்ரவரி 14, 2017

தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம் 2016 டிசம்பர மாதத்திற்கான கைத்தொழில் உற்பத்தியின் மாதாந்தச் சுட்டெண்ணைக் வெளியிட்டுள்ளது. கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்ணானது (IIP) மிக முக்கியமான குறிப்பிட்ட பொருளாதார குறிகாட்டியாக உள்ளதுடன் அதன் முக்கிய நோக்கம் குறிப்பிட்ட ஒரு காலப்பகுதியில் கைத்தொழில் உற்பத்தியின் அளவில் ஏற்படும் குறுகிய கால மாற்றங்களை வெளிக்கொணர்வதாகும். இது பொருளாதார அபிவிருத்தியின் திருப்புமுனைகளை ஆரம்ப கட்டத்தில் அடையாளங்காண பயன்படுகின்றது. DCS 2016ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதத்திலிருந்து மாதாந்த IIP குறிகாட்டியை வெளியிடுவதுடன் இந்நாளிலிருந்து 45 நாட்கள் இடைவெளியில் மாதாந்த அடிப்படையில் இச்சுட்டி வெளியிடப்படுவதாக திணைக்கள பணிப்பாளர் நாயகம் கலாநிதி ஏ.ஜே.சத்தரசிங்க 2016 டிசம்பரிற்கான இச்சுட்டெண்ணை வெளியிடுதல் சம்பந்தமான அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்தால் 2015 ஆம் ஆண்டை அடிப்படையாகக் கொண்டு (IIP) தொகுக்கப்பட்டது. வேறுபட்ட ஆண்டை அடிப்படையாகக் கொண்டு கணிக்கப்பட்ட சுட்டெண்கள் ஒப்பிடப்பட முடியாதவை.

வெளியிடப்பட்ட IIP பெறுமதிகளின் படி, 2015ஆம் ஆண்டின் சராசரி மாதாந்த உற்பத்திகளுடன் ஒப்பிடுகையில் 2016 டிசம்பர் மாத உற்பத்தியில் கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண் 3.6% ஆல் அதிகரித்துள்ளது.

**கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண் (2015=100)**

| மாதம், வருடம் | சுட்டெண் பெறுமதி |
|---|---|
| டிசம்பர் - 2016 | **103.6** |
| 4ஆம் காலாண்டு | **104.3** |

2015ஆம் ஆண்டின் சராசரி மாதாந்த உற்பத்திகளுடன் ஒப்பிடுகையில் 2016 டிசம்பர் மாத உற்பத்திகளில் உற்பத்திக் கைத்தொழில் தளபாடம் (21.6%), இயந்திர உபகரணம் (19.4%) அடிப்படை மருந்தாக்கல் உற்பத்திகள் (14.5%) மற்றும் ஏனைய உலோகமல்லாத தாதுப் பொருட்கள் உற்பத்தி (14.5%) ஆகிய குறிப்பிடத்தக்க அதிகரிப்பைக் காட்டுகின்றது. டிசம்பரில் உணவு உற்பத்தியானது 1.6%ஆல் அதிகரித்துள்ளது. 2015இன் சராசரி மாதாந்த உற்பத்திக் கைத்தொழிலுடன் ஒப்பிடுகையில் புகையிலை உற்பத்தி (11.3%) மது உற்பத்தி (6.3%) மின்னுபகரணம் (6.3%) கோக் மற்றும் சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலிய உற்பத்திகள் (4.9%) ஆகிய வீழ்ச்சியைக் காட்டுகின்றன. 2015இன் சராசரி உற்பத்தியுடன் ஒப்பிடுகையில் **2016 நான்காம் காலாண்டுக்கான** உற்பத்தித் துறைக் கைத்தொழில் உற்பத்தி, 4.3% ஆல் அதிகரித்துள்ளது. 2016இன் மாதாந்த, காலாண்டு கைத்தொழிற் சுட்டெண் பற்றிய மேலதிக விபரங்களுக்கு www.statistics.gov.lk/Industries இணையத்தை பார்க்குமாறு திணைக்ககளம் தெரிவித்துள்ளது.